2. அறிவிப்பு.

சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஒரு அறிவிப்பு. சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவில் (Senate) இப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த திரு. கே. எம். இராமசாமி கவுண்டர் இயற்கை எய்தியதாலும், திரு. ஆர். என். அரங்கநாதன், திரு. க. இராமமூர்த்தி, திரு. கொ. இரா. ஞான சம்பந்தன் ஆகிய மூவரும் இப்பேரவையின் உறுப்பினர்களாக இல்லாத காரணத்தாலும் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவில் 21—3—1973 வரை ஏற்பட்டுள்ள நான்கு வெற்றிடங்களுக்கு தமிழ் நாடு சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து நால்வரை தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு சென்னை பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் விதிமுறைப்படி, ஒற்றை மாற்றுவாக்கு மூலம் இத்தேர்வு நடைபெறும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 30—6—1971 புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப் பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 1—7—1971 வியாழக்கிழமை காலை 11 மணிக்கு பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 2—7—1971 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது நான்கிற்கு மேற் படுமாயின் 5—7—1971 திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையிலுள்ள உறுப்பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

3. 1971-72-ம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம் தொடர்ச்சி.

* திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையை இறைவனுடைய திரு நாமத்தைக் கொண்டு நான் பேசத் தொடங்குகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையின் உள்ளே நுழைந்து சில வார்த்தைகளைக் கூறு வதற்கு முன், இந்த அவைக்கு ஒரு உண்மையான விண்ணப் பத்தைச் செய்து கொள்ள விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை நான் ஆராய்வது, தோழமை உணர்ச்சியோடும், நாம் தொன்மையாகக் கொண்டிருக்கும் உறவோடும் ஆகும். அந்தப் பண்பையும், நல்லெண்ண உணர்ச்சியையும் அடிப்படை யாகக் கொண்டு, இதை அணுகுகிறேன், தொடங்குகிறேன். அதற்கு ஒரு உதாரணம் கூற விரும்புகிறேன்.